தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு
(2011–2012)

(பதினான்காவது பேரவை)

ஏழாவது அறிக்கை

27–12–2011 ஆம் நாளன்று கரூர் மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த அறிக்கை.

(பேரவைக்கு அளிக்கப் பெற்ற நாள்: 23 APR 2012)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை



மனுக்கள் குழு
(2011–2012)

(பதினான்காவது பேரவை)

ஏழாவது அறிக்கை

27–12–2011 ஆம் நாளன்று கரூர் மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த அறிக்கை.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

			பக்கங்கள்
1.	குழு உறுப்பினர்கள்	..	iii
2.	அறிக்கை	..	v
	இணைப்பு–I	..	1-20
	இணைப்பு–II	..	23-45
	இணைப்பு–III	..	49-53

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு

(2011-2012)

(பதினான்காவது பேரவை)

(2011–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 3–ஆம் நாள் நியமனம் செய்யப்பெற்றது.)

தலைவர்

1. திரு. ப. மோகன்,
   அரசு தலைமை கொறடா

உறுப்பினர்கள்

2. திரு. ஆர். அருள்செல்வன்
3. திரு. பா. கணேசன்
4. திரு. ஆர். என். கிட்டுசாமி
5. திரு. எஸ்.எஸ். சிவசங்கர்
6. திரு. டி. சுரேஷ்குமார்
7. திரு. ந. நஞ்சப்பன்
8. திரு. கே. பொன்னுசாமி
9. திரு. ஆ. ராமசாமி
10. திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி
* 11. டாக்டர் த. ஹரிதாஸ்

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன்	..	செயலாளர்
திருமதி கு. இந்துமதி	..	துணைச் செயலாளர்
திரு. மா. கோபாலகிருஷ்ணன்	..	சார்புச் செயலாளர்.

* (13–01–2012 முதல்)


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு (2011-2012)

(பதினான்காவது பேரவை)

ஏழாவது அறிக்கை

முன்னுரை

2011–2012–ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் ஏழாவது அறிக்கையினை மனுக்கள் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

குழுவின் கூட்டம்

14–07–2011–ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற மனுக்கள் குழுவின் கூட்டத்தில் கரூர் மாவட்ட பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களை ஆய்வு செய்ய 27–12–2011 ஆம் நாளன்று கரூர் மாவட்டத்தில் குழுவின் கூட்டத்தை நடத்த முடிவு செய்யப்பட்டது. அம்மாவட்ட பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட 98 மனுக்களில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் விதிகளுக்குட்பட்டிருந்த 64 மனுக்கள் கரூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டு அறிக்கைகள் கோரப்பட்டன. அறிக்கைகள் பெறப்பட்ட மனுக்களில் 51 மனுக்கள் தெரிவு செய்யப்பட்டு, அவற்றிற்கு விரிவான பதிலறிக்கைகள் தயாரிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

2011 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 27–ஆம் நாளன்று கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள மாவட்ட வளர்ச்சிமன்றக் கூடத்தில் குழு கூடியது.

கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி வெ. ஷோபனா, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் கரூர் மாவட்டத்திலுள்ள சம்பந்தப்பட்ட அரசுத் துறை அலுவலர்கள் குழு முன் பதிலளித்தனர். சம்பந்தப்பட்ட மனுதாரர்களும் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

தெரிவு செய்யப்பட்ட 51 மனுக்களைக் குழு ஆய்வு செய்தது. அவற்றுள் 22 மனுக்கள் குறித்து குழு தனது பரிந்துரைகளை அளித்தது. 23 மனுக்கள் மீது அரசுத் துறைகளால் அளிக்கப்பெற்ற பதிலுரைகள் படித்துப் பதிவு செய்யப்பெற்றன. மீதமுள்ள 6 மனுக்களுக்கான துறைகளின் பதிலுரைகளை ஏற்று, அவை நிறைவேற்றப் பெற்றதாக கருதலாம் எனக் குழு முடிவு செய்தது.

குழு பரிந்துரை அளித்த மனுக்களின் விவரங்கள் இணைப்பு–I–இல் அளிக்கப்பட்டுள்ளன. படித்துப் பதிவு செய்யப்பெற்ற மனுக்களின் விவரங்கள் இணைப்பு–II–இல் அளிக்கப்பட்டுள்ளன. நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள் இணைப்பு–III–இல் அளிக்கப்பட்டுள்ளன.

11–4–2012ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வறிக்கைக்குக் குழு தனது ஒப்புதலை அளித்தது.

சென்னை– 600 009,
11–04–2012,
பங்குனித் திங்கள் 29ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு–2043.

ப. மோகன்,
தலைவர்,
மனுக்கள் குழு.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



இணைப்பு–I

குழுவினால் பரிந்துரை வழங்கப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–I

குழுவினால் பரிந்துரை வழங்கப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
1	2780	திரு.எல்.ஜான்போஸ், விசுவாசபுரம், ஏ.வி.பி.நகர், பொதுமக்கள் சார்பு, சணப்பிரட்டி ஊராட்சி 1வது வார்டு, பகுபதிபாளையம் (வடக்கு), கரூர்.	விசுவாசபுரத்தில் வசிக்கும் மக்களுக்கு சாக்கடை அமைத்தல், சிமெண்ட் சாலைகள் அமைத்தல் மற்றும் குப்பை தொட்டி அமைத்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
கரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.33 விசுவாசபுரம் மற்றும் ஏ.வி.பி நகர் முதல் தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிமெண்ட் சாலைகள் அமைக்கும் பணிக்கு ரூ.5.30 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, நகராட்சி பொதுநிதியில் பணி மேற்கொள்ள ஏதுவாக 30–12–2011ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டவுடன், பணி செய்து முடிக்கப்படும். [ஆணையர், கரூர் நகராட்சி அவர்களின் கடித எண்.3087/2011/இ1, நாள்: 07–12–2011.]	மனுதாரர் கோரியுள்ள பணியை 60 நாட்களில் முடித்துவிட்டு இது தொடர்பான அறிக்கையை குழுவிற்கு அனுப்புமாறு கரூர் நகராட்சி ஆணையருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
2	2782	திரு. பழ.இராமன், த/பெ. பழனியப்பன், 48/179, மேல அக்ரஹாரம், கிருஷ்ணராயபுரம் அஞ்சல் மற்றும் கரூர் மாவட்டம்.	தென்கரை வாய்க்காலின் குறுக்கே 0/5 மதகிற்கு அருகில் செல்லாண்டியம்மன் கோவில் செல்லும் பாதையில் 3 மீட்டர் அகலத்திற்கு புதிய நடைபாதை பாலம் கட்டித் தரக்கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
K.H.L.C. S.B.C. தலைப்பு ஆகியவற்றில் உள்ள பாலங்கள், மதகுகள் ஆகியவை முழுமையாக சீர்செய்வதற்கு செயற்பொறியாளர், ஆற்றுப்பாதுகாப்பு கோட்டம், திருச்சி அவர்கள் மூலம் ரூ.150.00 கோடிக்கு கருத்துரு சமர்ப்பித்து, நபார்டு வங்கி உதவியுடன் பணி மேற்கொள்வதற்காக மாவட்ட ஆட்சியர், கரூர் அவர்கள் மூலமாக அரசின் ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆணை கிடைக்கப்பெற்றவுடன், பணி முடிக்கப்படும். [உதவி செயற்பொறியாளர், பொ.ப.து.நீ.ஆ.து., ஆ.பா.உபகோட்டம், குளித்தலை அவர்களின் கடித எண்.கோ.1/2011 நாள்: 23-5-2011.]	தென்கரை வாய்க்காலில், செல்லாண்டியம்மன் கோவில் பாதையில் உள்ள 1 மீ அகலமுள்ள பாலத்தை 3 மீ அகல பாலமாக மாற்றித் தருமாறு உதவி செயற்பொறியாளர் (நீ.ஆ.து) பொதுப்பணித் துறை அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
3	2783	1) திரு. ம.பழநியாண்டி, திருக்காம்புலியூர், கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம். 2) திரு. அ. சந்திரன், 15, கணபதி சந்து, கரூர்.	கரூர் மாவட்டம் கரூர் அமராவதி ஆறு போக்குவரத்து வெள்ளத் தடுப்பு சாலை வசதி ஏற்படுத்தக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
அமராவதி ஆற்றின் கரைகளை ஒட்டி குடியிருப்புகள் அதிகம் உள்ளன. அத்தகைய குடியிருப்புகள் உள்ள பகுதிகளை அப்புறப்படுத்தி சாலை அமைப்பது இயலாத ஒன்றாகும். அதுவுமின்றி ஆறு ஓரத்தில் போக்குவரத்து செறிவு அதிகம் தாங்கக்கூடிய சாலை அமைக்க ஏதுவான மண் (soil) இருப்பதில்லை. ஆறு ஓரத்தில் சாலை அமைப்பதால் நகருக்குள் வரும் வாகனங்கள் குறைய வாய்ப்பில்லை. தற்சமயம் தேசிய நெடுஞ்சாலை மூலமாக திருச்சி சாலையிலிருந்து மதுரை சாலையை இணைக்கும் வண்ணம் புறவழிச்சாலை அமைக்கும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. அது முடிவடைந்தவுடன் பெரும்பாலான வாகனங்கள் நகருக்குள் நுழையாமல் சேலம் திண்டுக்கல் மதுரை சாலையை அடையும். எனவே போக்குவரத்து நெரிசல் குறைந்து விடும். ஆற்றின் ஓரத்தின் சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. [கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலை, க(ம)ப, கரூர் அவர்களின் கடித எண்.2078/இவ.அ/ நாள்: 09–12–2011.]	பொதுமக்களின் நலன் கருதி அமராவதி ஆற்றின் கரையில் தடுப்புச் சாலை அமைத்துத் தருமாறும், இதன் மீதான தொடர் நடவடிக்கை குறித்து குழுவிற்கு அறிக்கை அளிக்குமாறும் கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறைக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
4	2787	திரு. ராசி. மாமுண்டியாபிள்ளை, 13–சுங்ககேட் தெரு, குளித்தலை.	குளித்தலை நகராட்சிக்குள் செல்லும் கண்ணாறுகள் தூய்மைப்படுத்துதல் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

குளித்தலை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த விரிவான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு உரிய அனுமதி பெற 4–11–2011 அன்று மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை–5 அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்திலேயே கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட திட்டம் பயன்பாட்டிற்கு வந்த உடன், மனுதாரர் கோரிக்கையின்படி நகரின் கழிவுநீர் அகற்றும் பணிகள் முழுமையான செயல்படும்.

[ஆணையர், குளித்தலை நகராட்சி அவர்களின் கடித எண்.2432/2011/இ1, நாள்: 21–12–2011.]

குழுவின் பரிந்துரை.

(6)

மனுதாரர் கோரியுள்ள இடத்தில் பாதாள சாக்கடைத் திட்டம் துவங்கவும், தற்காலிக தீர்வாக வாரத்திற்கு இருமுறை கொசு மருந்து அடிக்கவும், குளித்தலை நகராட்சி ஆணையருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
5	2789	திரு. ஜெயபாரதி, வள்ளலார் நகர், புலியூர் கரூர் மாவட்டம்.	சாக்கடை வசதி கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

புலியூர் பேரூராட்சி பகுதி முழுவதும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பாதாள சாக்கடை திட்டம் அமுல்படுத்திட முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு அரசுக்கு ஒப்புதல் வேண்டி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அரசு அனுமதி அளித்து, திட்டம் செயலாக்கத்திற்கு வரும் போது மேற்படி பாதாள சாக்கடை வசதி அமைத்துத் தரப்படும்.

[செயல் அலுவலர், புலியூர் (தேர்வுநிலை) பேரூராட்சி, கரூர் மாவட்டம் அவர்களின் கடித எண்.103/2011 நாள்: 02–12–2011.]

குழுவின் பரிந்துரை.

(6)

பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கும் வரை, வள்ளலார் நகர் மக்களுக்கு தற்காலிக தீர்வாக தினமும் சாக்கடையை சுத்தம் செய்யவும், கொசு மருந்து அடிக்கவும், புலியூர் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
6	2790	திரு. எஸ்.அஜித், வள்ளலார் நகர், புலியூர், கரூர் மாவட்டம்.	தெருவிளக்கு வசதி கோருதல்.

		துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.	
		(5)	(6)	
		புலியூர் பேரூராட்சி வள்ளலார் நகர் தெருவில் தெரு விளக்கு வசதி செய்திட ரூ.0.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் ஒப்புதல் பெற்றும், பேரூராட்சி மன்றத்தில் அனுமதி பெற்றும், வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் தெரு விளக்கு வசதி செய்து முடிக்கப்படும். [செயல் அலுவலர், புலியூர் (தேர்வுநிலை) பேரூராட்சி, கரூர் மாவட்டம் அவர்களின் கடித எண்.103/2011 நாள்: 02–12–2011.]	வள்ளலார் நகரில் தெருவிளக்கு அமைக்கும் பணியினை முடித்துவிட்டு அறிக்கையை குழுவிற்கு அனுப்புமாறு புலியூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.	
வரிசை எண்.	*மனு எண்.*	*மனுதாரரின் பெயரும், முகவரியும்.*	*மனுவின் கருக்கம்.*	
(1)	(2)	(3)	(4)	
7	2791	திரு. இரா.ராஜதுரை, வள்ளலார் நகர், புலியூர், கரூர் மாவட்டம்.	தார்ச்சாலை வசதி செய்து தரக் கோருதல்	ச
		துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.	
		(5)	(6)	
		புலியூர் பேரூராட்சி, வள்ளலார் நகர் தெருவில் தார்ச்சாலை வசதி செய்துதர ரூ.5.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பேரூராட்சி மன்றத்தில் பொருள் வைக்கப்பட்டு, அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதிப்பற்றாக் குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை 2011–2012 (Infra Gap Filling Fund) திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள கருத்துரு சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நிதியினை பெற்று வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் பணி முடிக்கப்படும். [செயல் அலுவலர், புலியூர் (தேர்வு நிலை) பேரூராட்சி, கரூர் மாவட்டம் அவர்களின் கடித எண்.103/2011 நாள்: 02–12–2011.]	வள்ளலார் நகருக்கு தார்ச்சாலை அமைக்கும் பணி தொடர்பான அறிக்கையை குழுவிற்கு அனுப்புமாறு புலியூர் பேரூராட்சி, செயல் அலுவலர் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.	

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
8	2795	திரு. கே.பி. பாலசுப்ரமணி மற்றும் ஊர்ப் பொதுமக்கள் மண்மங்கலம் கிராமம், கடம்பன்குறிச்சி கிராமம், கரூர் வட்டம், கரூர் மாவட்டம்.	நாமக்கல்–கரூர் சாலையில் மண்மங்கலம் கிராமத்தில் Median Opening இடத்தில் சாலையினை அகலப்படுத்தக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
24–01–2011 அன்று கோட்டாட்சியர், கரூர் தலைமையில் நடைபெற்ற பேச்சு வார்த்தையின்படி, பொது மக்கள் வேண்டுகோள் விடுத்த இடத்தில் புதியதாக Median Opening திறக்கப்பட்டு சாலையில் வெள்ளைக் கோடுகள், மற்றும் அனைந்து எரியும் மின் விளக்குகள் மற்றும் அணுகு சாலையில் வேகத்தடை அமைக்கப்பட்டது. மேலும் இந்த இடத்தில் இயங்கி வந்த மதுபானக் கடையும் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டது. விபத்துக்கள் முழுவதுமாக குறைந்து விட்டது. மேலும் இந்த இடத்தில் சாலையினை அகலப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. [திட்ட இயக்குநர், கரூர் அவர்களின் கடித எண்.இ.தே.நெ.ஆ/தி.அ.பி./ TN-3-Petition–2011/2160 நாள்: 02–12–2011.]	நாமக்கல்–கரூர் சாலையில் மண்மங்கலம் கிராமத்தில் Median Opening இடத்தில் சாலையினை அகலப்படுத்தும் பணி மீதான தொடர் நடவடிக்கை குறித்து குழுவிற்கு அறிக்கை அனுப்புமாறு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைய திட்ட இயக்குநருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
9	2798	திரு. சி. சண்முகம், மாரியம்மன் கோவில் தெரு, கிருஷ்ணராயபுரம், கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம்.	சார்பதிவாளர் அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் சார்பதிவாளர் அலுவலகம் கட்டக் கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

சார்பதிவாளர் அலுவலகம் கட்டுவதற்கு கிருஷ்ணராயபுரம் வட்டம், கிருஷ்ணராயபுரம் கிராமத்தில் அரசு புறம்போக்கு நிலம் ஏதுமில்லை. மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள புல எண் 63/1A1 என்பது கிராமக் கணக்குகளின்படி அழிஞ்சி பிள்ளையார் கோவிலுக்கு சொந்தமான இடமாகும். இந்து அறநிலையத் துறையினரால் அனுமதி வழங்கினால் மட்டுமே, மேற்கண்ட புல எண்ணில் சார்பதிவாளர் அலுவலகம் கட்ட இயலும்.

[வட்டாட்சியர், கிருஷ்ணராயபுரம் அவர்களின் கடித எண்.ஆ1/6623/2008 நாள்: 07–12–2011.]

குழுவின் பரிந்துரை.

(6)

மனுதாரர் கோரியுள்ள கோரிக்கையின் மீது தனிக்கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கவும், இது குறித்த அறிக்கையினை குழுவிற்கு அனுப்பவும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
10	2799	திரு. V. அருணகிரி, தலைவர், பகத் சிங் இளைஞர் நற்பணி மன்றம், வடசேரி அஞ்சல், தோகைமலை, குளித்தலை, கரூர்.	வடசேரி பெரிய ஏரி தூர்வாரி, சிறிய அணைக்கட்டு கட்டுதல் மற்றும் காவிரி ஆற்றின் மாயனூர் தடுப்பணையிலிருந்து, அரியாறு வரை இணைத்து, காவிரியில் வெள்ளம் வரும் பொழுது அதன் உபரி நீரை அரியாற்றில் திருப்பிவிட வாய்க்கால் வெட்டக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
தற்பொழுது, இக்கோட்டத்தில் மாயனூர் காவிரி ஆற்றிலிருந்து குண்டாறு வரை வெள்ள நீர் இணைப்புக் கால்வாய் திட்டப் பணிகள் நடைபெற்று வருவதால், பணிகள் முடிவடைந்தவுடன், மனுதாரரின் மனு குறித்து ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். [செயற்பொறியாளர், பொது, நீ.ஆ.து. திட்டம் மற்றும் வடிவமைப்பு கோட்டம், திருச்சி–1, அவர்களின் கடித எண். 1/2011/உசெபொ/நாள் 05–12–2011.]	மனுதாரர் கோரிக்கையை முன்னுரிமை அடிப்படையில் நபார்டு நிதி உதவியுடன் செய்திட மாவட்ட ஆட்சித் தலைவருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
11	2801	திரு.கே. தங்கராஜ். நுகர்வோர் இயக்கம், மேட்டு திருக்காம்புலியூர், கிருஷ்ணராயபுரம் வட்டம்.	மேட்டு திருக்காம்புலியூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
கரூர் உதவி இயக்குநர், (கா.ப) அவர்களது கடித ந.க.எண்.1140/இ/2011 நாள் 15–09–2011ன் வழி மேற்குறிப்பிட்ட கிராமத்திற்கு கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தர வேண்டி மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் மற்றும் பரிந்துரையுடன் மண்டல இணை இயக்குநர் அலுவலக ந.க.எண். 2221/இ/ 2011 நாள் 15–09–2011ன் வழி, ஆணையர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவ பணிகள், சென்னை–6 அவர்களுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசிடம் இருந்து உரிய அங்கீகார ஆணை பெறப்பட்டவுடன், மேட்டு திருக்காம்புலியூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைத்து தரப்படும். [மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்பு துறை, கரூர், அவர்களின் கடித எண்.2221/இ/2011 நாள் 15–09–2011.]	மேட்டு திருக்காம்புலியூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்கும் வரை நடமாடும் கால்நடை மருந்தக வசதி செய்து தர கால்நடை பராமரிப்புத் துறை, மண்டல இணை இயக்குநருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
12	2802	திரு. ஆர். சக்திவேல், செயலாளர், பெற்றோர் ஆசிரியர் கழகம், மேட்டுத் திருக்காம்புலியூர், கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம்.	கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், மேட்டுத் திருக்காம்புலியூர், அரசு உயர் நிலைப்பள்ளியின் சுற்றுச் சுவரை உயர்த்தக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
நபார்டு திட்டத்தின் கீழ் ஏற்கனவே, சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டுள்ளது. மேலும் சுற்றுச்சுவர் உயர்த்த தன்நிறைவுத் திட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள தலைமை ஆசிரியருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. [முதன்மை கல்வி அலுவலர், கரூர் அவர்களின் கடித எண். 8592/அ3/2011, நாள் 20–12–2011.]	அடுத்த நிதியாண்டில் சிறப்பினமாகக் கருதி, மனுதாரர் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
13	2804	திரு. என்.எம். வெள்ளக்காரன், த/பெ. மருதன், நெரூர் வடபாகம் அஞ்சல், கரூர் வட்டம் மற்றும் மாவட்டம்.	நெரூர் ராஜ வாய்க்கால் மைல் 6/0–1ல் உள்ள மோது பாசன வாய்க்காலான செங்கமேட்டான் கோவில் பாசன மதகினை சரிசெய்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
மேற்கண்ட செங்கமேட்டான் கோவில் பாசன மதகு உடைந்துள்ளதை சரி செய்ய ரூ. 2.48 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அனுமதிவேண்டி செயற்பொறியாளர் பொதுப்பணித் துறை, ஆற்றுப் பாதுகாப்பு கோட்டம், திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு பணிந்தனுப்பப்பட்டுள்ளது. வரும் மார்ச் மாதத்தில் பணி செய்து முடிக்கப்படும். [உதவி செயற்பொறியாளர் பொ.ப.துறை-ஆ.து, ஆ.பா. உபகோட்டம், குளித்தலை அவர்களின் கடித எண். கோ.42/2011 நாள்: 01–12–2011.]	நெரூர் ராஜ வாய்க்கலில், செங்கமேட்டான் கோவில் பாசன மதகினை சரிசெய்து கொடுக்கும் பணியினை முடித்துவிட்டு, இது குறித்த அறிக்கையை குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு நீர் ஆதாரத்துறை, பொதுப்பணித் துறை உதவி செயற் பொறியாளருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
14	2806	திரு. கார்த்திக் மற்றும் ஊர் பொதுமக்கள், அம்பேத்கார் மக்கள் மன்றம், மேலப்பாளையம் (அஞ்சல்), கிருஷ்ணராயபுரம் தாலுகா, கரூர்.	திருச்சி மெயின் ரோட்டில் இருந்து மேலப்பாளையம் வரை 1.50 கி.மீ சாலையை தார்ச் சாலையாக மாற்றித் தரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
இந்த சாலை கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு, போடப்பட்டு அவ்வப்போது பழுது பார்ப்பு பணிகள் செய்யப்பட்டு, தற்போது சுமாரான நிலையில் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்த சாலை 2 கி.மீ. தூரத்திற்கு குறைவாக உள்ளதாலும், 7.50 மீட்டர் அகலத்துக்கு குறைவாக உள்ளதாலும், நபார்டு சாலைகள் திட்டத்தில் மேற்கொள்ள இயலவில்லை. இச்சாலையை நிரந்தரமாக புணரமைக்க சுமார் ரூ. 24 லட்சம் நிதி ஒதுக்கீடு தேவைப்படுவதால் ஒன்றிய பொது நிதியில் நிதி ஆதாரம் குறைவாக உள்ளதாலும், ஒரே பணியாக மேற்கொள்ள இயலவில்லை. எனவே இப்பணியை ரூ. 24லட்சம் மதிப்பீட்டில் ஒன்றிய பொது நிதி, தன்னிறைவுத் திட்டம் மற்றும் ஒப்படைக்கப்பட்ட வருவாய் ஆகிய திட்டங்களின் மூலம் இணைத்து நிரந்தரமாக புனரமைப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. [வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), ஊராட்சி ஒன்றியம், தாந்தோணி அவர்களின் கடித எண். அ2/3355/2011, நாள் 23-12-2011.]	மனுதாரர் கோரும் சாலையை தார்ச் சாலையாக மாற்றிட தாந்தோணி, வட்டார வளர்ச்சி அலுவலருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	*மனு எண்*	*மனுதாரரின் பெயரும், முகவரியும்.*	*மனுவின் சுருக்கம்*
(1)	*(2)*	*(3)*	*(4)*
15	2808	திரு.மி.ஜோ.காக்ஸ்டன் ஜெரால்டு டைட்டஸ், T.வெங்கிடாபுரம், சின்னதாராபுரம், கரூர் மாவட்டம்-639 202.	மல்லநத்தம் கிராமத்திற்கு பேருந்து வசதி செய்வதற்கு, வெங்டாபுரம்-கே.பரமத்தி (வழி) மல்லநத்தம் வழியாக பேருந்து வசதி செய்ய கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
கோரிக்கையிலுள்ள மல்லநத்தம் கிராமம் அரவக்குறிச்சி–கே.பரமத்தி (வழி) சின்னதாராபுரம், C. கூடலூர், வேட்டையார்பாளையம் வழியாக நகரப் பேருந்து இயங்கும் வழித்தடத்தில் வேட்டையார்பாளையத்திலிருந்து உட்புறம் 2.00 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வழித்தடத்தில் இயக்கப்படும் தினசரி 4 நடைகளை வேட்டையார்பாளையத்திலிருந்து–மல்லநத்தம் கிராமத்தினை தொட்டு இயக்க நடவடிக்கையில் உள்ளது. [பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட்., திருச்சி மண்டலம் அவர்களின் கடித எண். வ/திவ2/157, நாள் 5–12–2011.]	மல்லநத்தம் கிராமத்திற்கு பேருந்து விட நடவடிக்கை எடுத்து அதன் விவரத்தை குழுவிற்கு அளிக்குமாறு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்)லிட்., பொது மேலாளர் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
16	2810	திரு. கே. சதாசிவம் மற்றும் கிராம ஊர்ப்பொதுமக்கள் தென்னிலை கிராமம், க.பரமத்தி வட்டம், கரூர் மாவட்டம்.	தென்னிலை கிராமத்தில் சுகாதார நிலையம் அமைக்க கோருதல்.

கரூர் மாவட்டம், கே.பரமத்தி வட்டத்திற்கு உட்பட்டது தென்னிலை கிராமம். இக்கிராமத்தில் ஏற்கனவே, ஒரு துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையத்தில் காய்ச்சல், சளி, தலைவலி போன்ற சிறு, சிறு நோய்களுக்கு மருந்து மாத்திரைகள் இருப்பில் தேவையான அளவு உள்ளன. கிராம சுகாதார செவிலியர் இந்நிலைய கட்டிடத்திலேயே தங்கியிருந்து 24 மணிநேரமும் மருத்துவ சேவை நல்ல முறையில் செய்து கொண்டு வருகிறார்.

மேலும் சின்னதாராபுரம் வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள நடமாடும் மருத்துவ குழுவினரால் இக்கிராமத்தில் மருத்துவ சேவை சுழற்சி முறையில் அளிக்கப்பட்டு வருகிறது. எலவனூர் கிராம மக்களுக்கு தற்பொழுது சிறு உபாதைகளுக்கு தேவையான மருத்துவ சேவைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

இக்கிராமத்தில் இருந்து 10 கி.மீ. தொலைவில் சின்னதாராபுரம் ஆரம்ப சுகாதார நிலையமும், கார்விழி ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகிறது.

ஒரு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு விதிமுறைகளின் படி, 30,000 மக்கள் தொகையும், 8கி.மீ.க்குள் வேறு ஆரம்ப சுகாதார நிலையமோ, அரசு மருத்துவமனையோ இருத்தல் கூடாது.

மேலும், கே.பரமத்தி ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகை 91340 ஆகும். இவ்வூராட்சியின் மக்கள் தொகை அடிப்படையில் 3 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானது ஆகும். ஆனால், 6 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

ஆகவே, அரசு விதிமுறைகளின்படி, தென்னிலை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள் கரூர் அவர்களின் கடித எண். 5619/அ3/2011, நாள் 01–12–2011.]

தென்னிலை கிராமத்தில் துணை சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த சுகாதாரப் பணிகள், துணை இயக்குநருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
17	2813	திரு. ம. வீரப்பன், பூவாயிப்பட்டி, கள்ளை (அஞ்சல்), குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம்.	கள்ளை ஊராட்சி, பூவாயிப்பட்டி காட்டு வாரியில் பாலம் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
2011–12ஆம் ஆண்டிற்கு ஒன்றிய பொது நிதியிலிருந்து ரூ. 2.00 இலட்சம் மதிப்பீட்டில் இப்பணியினை செய்திட 29–12–2011ந் தேதியன்று டெண்டர் கோரப்பட்டுள்ளது. [ஆணையர், ஊராட்சி ஒன்றியம், தோகைமலை அவர்களின் கடிதம் எண். அ2/3308/2011 நாள்: 09–12–2011.]	கள்ளை ஊராட்சி, பூவாயிப்பட்டி காட்டு வாரியில் பாலம் அமைக்கும் பணியினை முடித்து அது தொடர்பான அறிக்கையினை குழுவிற்கு அனுப்பவும், தோகைமலை ஊராட்சி ஆணையருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
18	2814	திரு. இரா. இராஜேந்திரன், வழக்கறிஞர் மற்றும் தாளாளர், கிங்ஸ்பார்க் பள்ளி, ஜாமியா நகர் அருகில், பெரியகுளத்துப்பாளையம், வெங்கமேடு அஞ்சல், கரூர்–639 006.	கரூர் நகரம், பசுபதிபாளையம்–இணைப்பு பாலம் அமைத்துத் தரக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

கரூர் நகரையும், பசுபதிபாளையம் பகுதியையும் இணைக்கும் அமராவதி ஆற்றில் கட்டப்பட்டுள்ள பழைய தரைப்பாலம் பராமரிப்பு கரூர் நகராட்சியை சேர்ந்ததாகும். கரூர் நகராட்சி தற்சமயம், குழிகளை கான்கிரீட் போட்டு செப்பனிட்டு போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் செய்து வருகிறது. பெரிய வாகனங்கள் செல்வதற்கு பாலத்தினை புதிதாக உயர்மட்ட பாலமாக கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இப்பணியினை நெடுஞ்சாலைத் துறை C.R.I.D.P. ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் மூலம் செயலாக்கம் செய்ய தலைமைப் பொறியாளர் (நெ) கூப சென்னை அவர்கள் கடித எண். 3555/திட்டம்–2/2011 நாள்:25–10–2011 மூலம் அரசுக்கு பிரேரணை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இப்பணியினை நெடுஞ்சாலைத்துறை மூலம் செயல்படுத்துவதற்கு ஏதுவாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நதி3) துறை அரசாணை (நிலை) எண் 185 நாள் 02–12–2011ன் மூலம் நெடுஞ்சாலைத் துறைக்கு இப்பாலம் மற்றும் அணுகுசாலை பகுதியினை ஒப்படைக்க நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுமதி வழங்கியுள்ளது.

[கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலை, க(ம)ப, கரூர் அவர்களின் கடித எண்2078/இவ.அ/நாள்: 09–12–2011.]

குழுவின் பரிந்துரை

(6)

கரூர் பசுபதிபாளையம், இணைப்புப் பாலம் அமைக்கும் பணி தொடர்பான தொடர் நடவடிக்கை குறித்த அறிக்கையை குழுவிற்கு தெரிவிக்குமாறு நெடுஞ்சாலை கோட்டப் பொறியாளர் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	*மனு எண்.*	*மனுதாரரின் பெயரும், முகவரியும்.*	*மனுவின் சுருக்கம்.*
(1)	*(2)*	*(3)*	*(4)*
19	2816	திரு. ம. ரத்தினம், எம்.ஏ.,பிஎட்., இயக்குனர், டாக்டர் அம்பேத்கர் மக்கள் நல மேம்பாடு மற்றும் கல்வி அறக்கட்டளை, 20 அங்கு நகர், காந்தி கிராமம், கரூர்–4.	கரூர் மாவட்டம், தாந்தோன்றிமலை கிராமத்தில் ஆதிதிராவிடர் இன மக்களுக்கு திருமண மண்டபம் கட்டித்தரக் கோருதல்.

(5)

தாந்தோணி கிராமத்தில் ஆதிதிராவிடர் இன மக்களுக்கான சமுதாயக்கூடம் கட்ட ரூ.26,00,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சமுதாயக்கூடம் கட்ட தாந்தோணி கிராமத்தில் உள்ள புல எண். 582பில் 0.73.0 ஹெக்டேர் மற்றும் புல எண்.681ல் 0.45.0 ஹெக்டேர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் தேர்வு செய்யப்பட்டது.

இதில் புல எண்.582பி2வை ஆய்வு மேற்கொண்ட திருச்சி தாட்கோ உதவி செயற்பொறியாளர், இந்த இடம் சமுதாயக்கூடம் கட்ட தகுதியானது அல்ல என தெரிவித்த காரணத்தினால், புலஎண்.681யை நேரடி பேச்சுவார்த்தை மூலம் கையகம் செய்ய முடிவு மேற்கொள்ளப்பட்டது. அரசு விதிகளின்படி வழிகாட்டி மதிப்பு, சந்தை மதிப்பு இதில் எது குறைவோ, அந்த அடிப்படையில், ரூ.59,000/–விலை நிர்ணயம்செய்யப்பட்டு அருள்மிகு ஸ்ரீ கல்யாண வெங்கட்ரமண சுவாமி கோயில் நிலம் என்பதால் இந்த விலையை ஏற்று, முன் நுழைவு அனுமதியும் தடையின்மை சான்றும் கோரி சிறப்பு ஆணையர் மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. இது தொடர்பாக நீண்ட நாட்களுக்கு பின் அனுப்பப்பட்ட இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்கள் கடிதத்தில் சட்டப்பிரிவு 34ன் கீழ் சார்பதிவாளர் வழிகாட்டி மதிப்பு அல்லது மாவட்ட வருவாய் அலுவலரின் சந்தை மதிப்பு இதில் எது அதிகமோ அதனுடன் 50% சேர்த்து 150% தொகைக்கு விற்பனைக்கு பெற்றுக் கொள்ள சம்மதம் தெரிவிக்க கேட்கப்பட்டது. இதன் அடிப்படையில், தற்போதைய சந்தைமதிப்பு ரூ.33,57,200/–எனவும் சார்பதிவாளரின் வழிகாட்டு மதிப்பு ரூ. 1,87,980/– என்றும் இதில் அதிகமான சந்தை மதிப்பான ரூ.33,57,200/–உள்ளதால் இதனுடன் 50% சேர்த்து ரூ.55,89,738/–அளித்தால் நிலத்தை வழங்க கோவில் நிர்வாகத்தினர் சம்மதம் தெரிவித்தனர். இது தொடர்பாக மேற்படி தொகையினை வழங்க கோரி ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை அவர்களை கேட்டுக்கொண்டதின் பேரில் செயல் அலுவலர் ரூ.55,89,738/–சந்தை மதிப்பாக அளிக்கும்படி வலியுறுத்தி வரும் நிலையில், இந்த இடத்தில் சமுதாயக்கூடம் கட்டுவதன் அவசியத்தை கூறுமாறும், இதற்கு பதிலாக மாற்று நிலம் ஏதாவது கிடைக்க வாய்ப்பு உள்ளதா என்பது குறித்து செயற்குறிப்பினை அனுப்பக்கோரியிருந்தனர். வேறு இடம் தேர்வு செய்வது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இடம் கிடைக்காத நிலையில் ஆதிதிராவிடர் நலன் கருதி அரசாணை (டி) 144 ஆதிமபந (எஸ்.சி.பி) துறை நாள்: 12-09-2003ல் தெரிவித்தவாறு ஆதிதிராவிடர் மக்களுக்கு சமுதாயக்கூடம் கட்ட மேற்படி கோயில் நிலத்தையே பெறுவதற்கு சம்மதம் பெற்றுத் தருமாறு ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. இந்த

(6)

தாந்தோணி கிராமத்தில் புதிய இடத்தை தேர்வு செய்தும், தேவையான நிதியினைப் பெற்றும் சமுதாயக்கூடம் கட்டித்தர கரூர் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

(5)

கோரிக்கையினை அரசிடம் நேரடியாக வலியுறுத்துமாறு ஆதிதிராவிடர் நலத்துறை, ஆணையர் கேட்டுக் கொண்டதன் பேரில் அரசு செயலாளருக்கு இந்து சமய அறநிலைய துறையிடமிருந்து நிலத்தை பெறுவதற்கு சம்மதம் பெற்றுத் தருமாறு இவ்வலுவலக கடிதம் எண்.ந.க.எல் 1/28238/2005 நாள்: 26–09–2009யில் கோரப்பட்டது. இத்தைகைய சூழ்நிலையில் தாந்தோணி சமுதாயக்கூடம் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ரூ. 26,00,000/–ஐ ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எஸ். 2/12029/2010–3 நாள்:12–09–2011ன்படி கீழ்க்கண்ட மாவட்டங்களில் சமுதாயக்கூடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

1. தூத்துகுடி மாவட்டம்–பாண்டவர் மங்கலம்.

2. இராமநாதபுரம் மாவட்டம்–மலையான் குடியிருப்பு.

3. திருநெல்வேலி மாவட்டம்–விஸ்வநாதபேரி.

[மாவூட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், கரூர் மாரீட்டம் அவர்களின் கடித எண். ச1/21925/2011 நாள்:02–12–2011.]

வரிசை எண்.	*மனு எண்.*	*மனுதாரரின் பெயரும், முகவரியும்.*	*மனுவின் சுருக்கம்.*
(1)	*(2)*	*(3)*	*(4)*
20	2828	திரு. ஆர். கருப்பையா, 33, ஜே. வைகநல்லூர், அக்ரகாரம், குளித்தலை, கரூர் மாவட்டம்.	குளித்தலை அரசினர் மருத்துவமனையில் சித்தா பிரிவு புதிய கட்டிடத்துடன் அனைத்து வசதிகளுடன் செயல்பட நடவடிக்கை மேற்கொள்ள கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

குளித்தலை சட்டமன்ற உறுப்பினரிடம் கட்டிடம் கட்ட தொகுதி மேம்பாட்டு நிதி கோரப்பட்டுள்ளது. குளித்தலை சித்த மருத்துவப் பிரிவில் போதிய இட வசதி இல்லாத காரணத்தால் அனைத்து உபகரணங்களும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. புதிய கட்டிடம் கட்ட தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து அவர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டிடம் கட்ட வேண்டும். இதற்கு குளித்தலை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்களிடம் சட்டமன்ற உறுப்பினரின் நிதியிலிருந்து நிதி ஒதுக்கி கட்டிடம் கட்டித் தர வேண்டுமென மாவட்ட சித்த மருத்துவ அலுவலரால் கேட்கப்பட்டுள்ளது. கடித எண் 3602/ நி/ 2011, நாள் 20–10–2011.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்த உடன், புதிய கட்டிடம் கட்டி அதில் அனைத்து உபகரணங்களும் செயல்படுத்த இயலும்.

[மாவட்ட சித்த மருத்துவ அலுவலர், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடித எண் ஆ4/17165/2011, நாள் 30–11–2011.]

குழுவின் பரிந்துரை

(6)

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியினைப் பெற்று, குளித்தலை அரசு மருத்துவமனையில் சித்த மருத்துவமனையை அமைக்கும் பணி தொடர்பான அறிக்கையை குழுவிற்கு அனுப்புமாறு சித்த மருத்துவ அலுவலருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	*மனு எண்.*	*மனுதாரரின் பெயரும், முகவரியும்.*	*மனுவின் சுருக்கம்.*
(1)	*(2)*	*(3)*	*(4)*
21	2832	திரு. ராசி. மாமுன்டியாபிள்ளை, எண் 13, சுங்கமேட் தெரு, குளித்தலை–639 104.	குளித்தலை காட்டுவாரியை தூர்வாரி அகலப்படுத்த கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

குளித்தலை காட்டுவாரி கே. புதுப்பட்டி சைபன்னிலிருந்து பெட்டவாய்த்தலை நங்கம் அணைவரை குளித்தலை ஆற்றுப் பாதுகாப்பு உபகோட்டத்திற்கு உட்பட்ட பகுதியாகும். இந்த இடைப்பட்ட பகுதிகளை தூர்வாரவும், அகலப்படுத்தவும், ஆழப்படுத்தவும் ரூ. 13.60 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்து இத்துறையின் மூலம் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. எனினும் தற்போது குளித்தலை, பரளி, வாளாந்தூர், மேட்டுமருதூர் கிராமங்களில் உள்ள காட்டு வாரியினை ரூ. 30.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார்செய்யப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்த ஆண்டு மார்ச் 2012–க்குள் பணி முடிக்கப்படும்.

[உதவி செயற்பொறியாளர், பொ.ப.து.நீ.ஆ.து., ஆ.பா. உட்கோட்டம், குளித்தலை, அவர்களின் கடித எண் கோ.1/2011, நாள் 20–06–2011.]

குழுவின் பரிந்துரை

(6)

குளித்தலை, காட்டுவாரியை தூர்வாரி, அகலப்படுத்தும் பணி முக்கியமானது என்பதால் அதனை உடனே செய்து முடித்திட நீர் ஆதாரத் துறை, பொதுப்பணித் துறை, உதவி செயற்பொறியாளருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
22	2835	திரு. கே. ஞானசேகரன், இணை செயலாளர், பெற்றோர் ஆசிரியர் கழகம், மேட்டுத்திருக்காம்புலியூர், கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம்.	கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், மேட்டுத்திருக்காம்புலியூர், அரசு உயர்நிலைப்பள்ளியில் கூடுதலாக புதிய கட்டிடம், விழா மற்றும் கூட்ட அரங்க நிகழ்ச்சிக்கு விழா மேடை, நிழற்கூடம் வசதி மற்றும் கழிப்பிட வசதி போன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்தக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

மேற்படி வசதிகள் தன்னிறைவுத் திட்டம் மற்றும் அனைவருக்கும் கல்வித்திட்டத்தின் கீழ் ஏற்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க பள்ளித் தலைமை ஆசிரியருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

[முதன்மை கல்வி அலுவலர், கரூர் அவர்களின் கடித எண் 4164/அ3/2011, நாள் 20–12–2011.]

குழுவின் பரிந்துரை

(6)

மனுதாரர் கோரியுள்ள அடிப்படை வசதிகளை தன்னிறைவுத் திட்டம், மற்றும் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்மூலம் ஏற்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கை குறித்த அறிக்கையை அனுப்பி வைக்குமாறு கல்வி அலுவலருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

இணைப்பு–II

குழுவினால் படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்

சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–II

குழுவினால் படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
1	2788	திரு. கே.ஆர். டால்வின்ராஜ், வள்ளலார் நகர், புலியூர், கரூர் மாவட்டம்.	புலியூர் பேரூராட்சி, வள்ளலார் நகருக்கு குடிநீர் வழங்கக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
புலியூர் பேருராட்சி, 12–வது வார்டு வள்ளலார் நகருக்கு குடிநீர் குழாய் விஸ்தரிப்பு பணி பொது நிதியில் செய்திட மதிப்பீடு ரூ. 1.00 இலட்சத்திற்கு பெறப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டினை எதிர்வரும் ஜனவரி 2012–ஆம் மாதத்தில் நடைபெறும் பேரூராட்சி மன்ற கூட்டத்தில் பொருள் வைத்து ஒப்புதல் பெற்று உரிய பணி செய்து முடிக்கப்படும். [செயல் அலுவலர், புலியூர் (தேர்வுநிலை) பேரூராட்சி புலியூர்–639 114, கரூர் மாவட்டம், அவர்களின் கடித எண் 103/2011, நாள் 02–12–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
2	2792	திரு. ஆர். முத்துசாமி, எம்.ஏ.எம்.எட்., ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர், காமராஜ் பண்ணை காலனி, வீரராக்கியம்–639 114, பாலராஜபுரம் கிராம ஊராட்சி.	ஏற்கனவே இருந்த சாக்கடையை தூர்த்து விட்டு, அதன் அடியில் குடிநீர் விநியோக குழாயை ஊராட்சியில் அமைத்ததால் வீட்டு கழிவுநீர் /மழை நீர் வடிய வழியில்லாமல் தெருவில் தேங்கி நிற்பதை சீர்செய்யக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மனுவில் குறிப்பிடப்பட்ட கோரிக்கை தொடர்பாக நேரில் தலப்பாய்வை செய்யப்பட்டதில் 400 மீட்டர் கழிவுநீர் சாக்கடை கட்டப்பட வேண்டியுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள ரூ. 2.75 இலட்சம் நிதி தேவைப்படுகிறது. இப்பணியினை ஊராட்சி ஒன்றிய பொது நிதி மூலம் மேற்கொள்ள எதிர்வரும் ஒன்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானம் பெற்று மார்ச்–2012 மாதத்திற்குள் முடிக்கப்படும். [வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), ஊராட்சி ஒன்றியம், கிருஷ்ணராயபுரம், அவர்களின் கடித எண் அ9/510/2011, நாள் 02–12–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
3	2794	திரு. எம். குமரவேல், தலைவர் மனித உரிமைகள் கழகம், சுங்ககேட், குளித்தலை, கரூர் மாவட்டம் (கிழக்கு)	குளித்தலை– அய்யர்மலை அரசு கலைக்கல்லூரி (வழி) வதியம், கண்டியூர், சீகம்பட்டி, கே.புதுப்பட்டி மற்றும் வேங்காம்பட்டி வழித்தடத்தில் புதிதாக பேருந்து வசதி செய்யக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
குளித்தலை–அய்யர்மலை அரசு கலைக்கல்லூரி (வழி) வதியம், கண்டியூர், சீகம்பட்டி, கே.புதுப்பட்டி மற்றும் வேங்காம்பட்டி வழித்தடத்தின் மொத்த நீளம் 14.9 கி.மீ. ஆகும். இவ்வழித் தடம் குளித்தலையிலிருந்து அய்யர் மலை செல்வதற்கு சுற்று வழித்தடமாக உள்ளதால், இதில் நேரடிப் பயணிகள் பயணம் செய்ய வாய்ப்பில்லை. குளித்தலை–சீகம்பட்டி பிரிவு வரை உள்ள 6.7 கி.மீ. பகுதிக்கு குளித்தலை – குளித்தலை வழித்தடத்தில் அரசு நகரப் பேருந்து மூலம் தினசரி 3 நடைகளும், சீகம்பட்டி பிரிவு – வேங்காம்பட்டி வரை உள்ள 4.7 கி.மீட்டருக்கு குளித்தலை–வேங்காம்பட்டி வழித்தட தனியார் துறை மின் பேருந்துகள் மூலம் தினசரி 10 நடைகளும் இயக்கப்படுகிறது. மேலும் வேங்காம்பட்டி–அரசு கலைக் கல்லூரி வரை உள்ள 3.5 கி.மீ. தூரத்தில் கீழவேங்காம்பட்டி என்ற சிறிய கிராமமே உள்ளது. எனவே புதிய பேருந்து இயக்குவதற்கு போதுமான பயணிகள் அட்டவு இருக்க வாய்ப்பில்லை.	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

[பொதுமேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட்., திருச்சி மண்டலம், அவர்களின் கடித எண் திவ/155/2011,நாள் 5–12–2011.]

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
4	2796	திரு. கோபாலதேசிகன், P.M. துரைசாமி அறக்கட்டளை வளாகம், மருதூர், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம்.	அய்யர்மலை கலைக் கல்லூரியில் பயிலும் மாணவிகளுக்கு பயனளிக்கும் வகையில் நகரப் பேருந்துகளின் காலஅட்டவணைகளை மாற்றம் செய்யவும், புதிய வழித்தடங்கள் இயக்கவும் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
கோரிக்கையிலுள்ள அய்யர்மலை கலைக்கல்லூரியில் பயிலும் மாணாக்கர்களுக்கு பயனளிக்கும் வகையில் குளித்தலை, தோகைமலை, பஞ்சப்பட்டி, பனிக்கம்பட்டி உட்பட அனைத்து பகுதிகளிலிருந்தும் நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. இக்கல்லூரி தொடங்கும், முடிவுறும் நேரங்களுக்கு நகரப் பேருந்துகள் இல்லாத வழித்தடங்களில் புறநகரப் பேருந்துகளில் மாணாக்கர்கள் பயணம் செய்ய அனுமதிக்கப்படும். [பொதுமேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட்., திருச்சி மண்டலம், அவர்களின் கடித எண் திவ2/156/2011, நாள் 5-12-2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
5	2800	திரு. இ. மாணிக்கம் (சிவனடியார்), 62, சிறு பூங்கா தெரு, காவேரி நகர், குளித்தலை.	கரூர் மாவட்டம், குளித்தலை நகர், கடம்பர்கோயில் அருள்மிகு கடம்பவனேஸ்வரர் திருக்கோயில் சுவாமி மற்றும் அம்பாள் திருத்தேர் புதிதாக செய்து தேரோட்டம் நடத்தக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மேற்படி திருக்கோயில் ச.பி. 46(i)–ன்கீழ் பட்டியலில் சேர்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் திருநாவுக்கரசரால் பாடல்பெற்ற திருத்தலமாகும். இத்திருக்கோயிலில் உள்ள சுவாமி மற்றும் அம்பாள் தேர் பழுதடைந்துவிட்டதால் தொடர்ந்து தேரோட்டம் நடத்த இயலவில்லை. எனவே சுவாமி மரத்தேர் புதியதாக செய்ய ரூ. 22,50,000/– க்கும், அம்மன் மரத்தேர் புதியதாக செய்ய ரூ. 21,50,000/–க்கும் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இரண்டு மரத்தேர்களையும் அரசு நிதியுதவி பெற்று புதிதாக மரத்தேர் செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. [இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, திருச்சிராப்பள்ளி–6, அவர்களின் கடித எண் 13031/2011, நாள் 02–12–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
6	2803	திரு. Rtn. P. சுப்பிரமணியன், பாரதீய ஜனதா கட்சி, எண் 76, கே.வி.பி. நகர், கரூர்–639 002.	டாஸ்மாக் கடை எண் 4914–னை இடமாற்றம் செய்யக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
கடை எண் 4914, பழைய பைபாஸ் சாலை கரூர் கடையினை இடமாற்றம் செய்ய இடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது கட்டிட பணி நடைபெற்று வருகிறது. இன்னும் ஒருவார காலத்திற்குள் கடை இடமாற்றம் செய்யப்படும். [மாவட்ட மேலாளர்/துணை ஆட்சியர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் லிட்., கரூர் அவர்களின் கடித எண் சி.வி. 4/8724/2011, நாள் 01–12–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	*மனு எண்*	*மனுதாரரின் பெயரும், முகவரியும்.*	*மனுவின் கருக்கம்*
(1)	*(2)*	*(3)*	*(4)*
7	2805	திரு. வி. ஜெகநாதன், ஆர். ராமசாமி, டி.சரவணன், க.முருகேசன், காந்தி நகர், எலவனூர் கிராமம், அரவக்குறிச்சி வட்டம், கரூர் மாவட்டம்.	எலவனூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

கரூர் மாவட்டம், க.பரமத்தி வட்டாரத்திற்கு உட்பட்டது எலவனூர் கிராமம், இக்கிராமத்தில் ஏற்கனவே ஒரு துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையத்தில் காய்ச்சல், சளி, தலைவலி போன்ற சிறு, சிறு நோய்களுக்கு மருந்து மாத்திரைகள் இருப்பில் தேவையான அளவு உள்ளன. கிராம சுகாதார செவிலியர் இந்நிலைய கட்டிடத்திலேயே தங்கி இருந்து 24 மணிநேரமும் மருத்துவ சேவை நல்ல முறையில் செய்து கொண்டு வருகிறார்.

சின்னதாராபுரம் வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள நடமாடும் மருத்துவ குழுவினரால் இக்கிராமத்தில் மருத்துவ சேவை சுழற்சி முறையில் அளிக்கப்பட்டு வருகிறது. எனவே எலவனூர் கிராம மக்களுக்கு தற்பொழுது, சிறு உபாதைகளுக்கு தேவையான மருத்துவ சேவைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

இக்கிராமத்தில் இருந்து 6 கி.மீ. தொலைவில் காசிபாளையம் ஆரம்ப சுகாதார நிலையமும், 9 கி.மீ. தொலைவில் சின்னதாராபுரம் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகிறது.

ஒரு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு விதிகளின்படி, 30,000 மக்கள் தொகையும், 8 கி.மீ.க்குள் வேறு ஆரம்ப சுகாதார நிலையமோ, அரசு மருத்துவமனையோ இருத்தல் கூடாது.

மேலும், க.பரமத்தி ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகை 91340 ஆகும். இவ்வொன்றியத்தின் மக்கள் தொகை அடிப்படையில் 3 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானது ஆகும். ஆனால் 6 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

ஆகவே, அரசு விதிமுறைகளின்படி, எலவனூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள் கரூர் அவர்களின் கடித எண்.5619/அ3/2011 நாள்: 01-12-2011.]

குழுவின் குறிப்புரை.

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
8	2807	திரு. பி. குணசேகரன், தலைவர், பெற்றோர் ஆசிரியர் கழகம், அரசு உயர்நிலைப்பள்ளி, மேட்டுத் திருக்காம்புலியூர், கிருஷ்ணராயபுரம் வட்டம்.	கரூர் மாவட்டம், மேட்டுதிருக்காம்புலியூர் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
ஊர் பொதுமக்கள் மேட்டுதிரும்காம்புலியூர் பள்ளியின் சார்பில் தரம் உயர்த்தக்கோரும் கருத்துருக்களுடன், பொதுமக்கள் பங்குத்தொகை ரூ.2,00,000/– செலுத்தி அனுப்பினால் கருத்துருவை பரிந்துரை செய்து பள்ளிக்கல்வி இயக்குநருக்கு பணிந்தனுப்பப்படும். [முதன்கை கல்வி அலுவலர், கரூர் அவர்களின் கடித எண்.2819/அ4/2011, நாள் 5–12–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
9	2811	திருமதி கே.வசந்தா, க/பெ.காளியப்பன், 56/3, நரசிம்மபுரம் தெற்கு, கரூர்.	கரூர் நகரில் நரசிம்மபுரம் தெற்கு தெருவில் வீடுகளின் பின்புறம் வீட்டு உபயோக கழிவுநீர் செல்வதற்கான சந்துவிட்டு கட்டிடம் கட்டியுள்ள சந்தில் விளையும் சுகாதார சீர்கேட்டை சரி செய்து தரக்கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

தெரிவிக்கப்பட்டுள்ள இடம் நரசிம்மபுரம் தெற்கு தெருவில் வீடுகளின் பின்புறம் வீட்டு உபயோக கழிவுகள் செல்வதற்கான சந்தில் உள்ள சுகாதார கேடுகள் சரி செய்யப்பட்டு விட்டது. மேலும் முத்துராஜபுரம் தெருவின் மேற்கு பகுதியில் சுமார் 600 அடி தொலைவில் உள்ள பிரம்மதீர்த்தம் ரோட்டில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் இருபாலருக்கும் ஆண், பெண் முறையே 14 மொத்தம் 28 சீட்கள் கழிப்பிட வசதி மற்றும் குளியல் வசதி கொண்ட பொதுசுகாதார வளாகம் கட்டப்பட்டு மகளிர் சுயஉதவி குழு மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த பகுதி மக்களுக்கு கழிப்பிடத்தை பயன்படுத்துமாறு தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

[ஆணையர், கரூர் நகராட்சி அவர்களின் கடித எண்.எச்1/4220/2009. நாள்: இல்லை]

குழுவின் குறிப்புரை.

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
10	2820	திரு. கே. கண்ணதாசன் (உழவர் ஆய்வுமன்ற அமைப்பாளர்) த.பெ. குஞ்சப்பிள்ளை நெய்தலூர் (தெற்கு) அஞ்சல், நங்கவரம் வழி, குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம்.	குளித்தலை வட்டம் நெய்தலூர் (தெற்கு) கிராமம், நத்தம் புல எண்.359,360-ல் ஆதிதிராவிடர் தெருவிற்கு செல்லும் பொதுப்பாதையை அதே ஊரைச் சேர்ந்த கே.சுந்தராஜீ த/பெ. சுந்தன், கே.மாணிக்கம் த/பெ.சுந்தன் இருவரும் வேலிபோட்டு ஆக்கிரமித்துள்ளதை அகற்றித் தரக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
மனுதாரர் கோரிக்கை தொடர்பாக 1–12–2011 அன்று குளித்தலை மண்டல துணை வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையருடன் புல தணிக்கையும் விசாரணையும் மேற்கொள்ளப்பட்டது. கிராம நத்தம் புல எண்.359/55, 360/35 கிராமக் கணக்குகளில் சந்து மற்றும் காலிநத்தம் என உள்ளது. மேற்படி சந்து மற்றும் காலிநத்தத்தில் மனுதாரர் தெரிவித்துள்ளபடி வேலி ஆக்கிரமிப்பு ஏதுமில்லை. இருப்பினும் மேற்படி புல எண்கள் மனுதாரர் முன்னிலையில் அளந்து அத்துக் காட்டப்பட்டது. [வட்டாட்சியர், குளித்தலை அவர்களின் கடித எண்.அ4/9165/2011, நாள்: 2–12–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	*மனு எண்*	*மனுதாரரின் பெயரும் முகவரியும்.*	*மனுவின் சுருக்கம்*
(1)	*(2)*	*(3)*	*(4)*
11	2821	திரு. R. சுப்ரமணியன், துணைச் செயலாளர், காவிரி டெல்டா விவசாயிகள் நலச்சங்கம், திருச்சி கவுண்டம்பட்டி, குறிச்சி அஞ்சல், நங்கவரம் (வழி) குளித்தலை வட்டம் கரூர் மாவட்டம்.	திருச்சி ச.பேநிலையம்–கவுண்டம்பட்டி (வழி) உறையூர், குழுமணி, கோப்பு வழித்தடத்தில் புதிதாக நகரப்பேருந்து ஒன்று இயக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை.

குழுவின் குறிப்புரை.

(5)

திருச்சி ச.பே.நிலையத்திலிருந்து கவுண்டம்பட்டி வழியாக இனுங்கூர், நெய்தலூர் காலனி, புதுப்பட்டி, நங்கவரம், நச்சலூர், கலிங்கப்பட்டி, பொய்யாமணி ஆகிய ஊர்களுக்கு 6 நகரப் பேருந்துகள் மூலம் தினசரி 43 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. இதுதவிர தனியார்துறை பேருந்துகள் மூலம் தினசரி 16 நடைகளும் ஆக மொத்தம் தினசரி 59 நடைகள் இயக்கப்படுகிறது.

திருச்சி ச.பே. நிலையம்–குறிச்சி (வழி) பெருகமணி, கவுண்டம்பட்டி வழியாக நகரப் பேருந்து ஒன்றின் மூலம் தினசரி 4 நடைகள் 16–09–2011 முதல் இயக்கப்படுகிறது.

மேலும் திருச்சி, ச.பே.நிலையம்–குளித்தலை (வழி) குழுமணி, கோப்பு, கவுண்டம்பட்டி வழியாக தினசரி 4 நடைகளும் இயக்கப்படுகிறது. ஆக கவுண்டம்பட்டி கிராமத்திற்கு தினசரி 67 நடைகள் இயக்கப்படுகிறது.

[பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட்., திருச்சி மண்டலம், அவர்களின் கடித எண்.5/திவ2/158/2011 நாள்: 5–12–2011.]

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
12	2822	திரு. R. சுப்ரமணியன், துணைச் செயலாளர், காவிரி டெல்டா விவசாயிகள் நலச்சங்கம், திருச்சி கவுண்டம்பட்டி, குறிச்சி அஞ்சல், நங்கவரம் (வழி) குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம்.	திருச்சி ச.பே.நிலையம்–கரூர் (வழி) உறையூர், குழுமணி, கோப்பு, கவுண்டம்பட்டி, பெருகமணி வழித்தடத்தில் புதிதாக பேருந்து ஒன்று இயக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
கோரிக்கையில் உள்ள திருச்சி ச.பே.நிலையம்–கரூர் (வழி) கவுண்டம்பட்டி வழித்தடம் திருச்சியிலிருந்து கரூர் செல்ல சுற்று வழித்தடமாகும். எனவே, இவ்வழித்தடத்தில் நேரடி பயணிகள் செய்ய வாய்ப்பில்லை. இவ்வழித்தடம் முழுவதும் கீழ்கண்டுள்ளவாறு பகுதி பகுதியாக தற்போது போதிய பேருந்து வசதி பெற்றுள்ளது. திருச்சி ச.பே.நிலையத்திலிருந்து கவுண்டம்பட்டி வழியாக இனுங்கூர், நெய்தலூர்காலனி, புதுப்பட்டி, நங்கவரம், நச்சலூர், கலிங்கப்பட்டி பொய்யாமணி ஆகிய ஊர்களுக்கு 6 நகரப்பேருந்துகள் மூலம் தினசரி 43 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. இதுதவிர தனியார்துறை பேருந்துகள் மூலம் தினசரி 16 நடைகளும் ஆக மொத்தம் தினசரி 59 நடைகள் இயக்கப்படுகிறது. மேலும் குளித்தலை–குழுமணி (வழி) நங்கவரம், கவுண்டம்பட்டி வழியாக தினசரி 8 நடைகள் இயக்கப்படுகிறது. திருச்சி ச.பே.நிலையம்–குறிச்சி (வழி) பெருகமணி, கவுண்டம்பட்டி வழியாக நகரப் பேருந்து ஒன்றின் மூலம் தினசரி 4 நடைகள் 16–09–2011 முதல் இயக்கப்படுகிறது. மேலும் திருச்சி ச.பே.நிலையம்–குளித்தலை (வழி) குழுமணி, கோப்பு, கவுண்டம்பட்டி வழியாக தினசரி 4 நடைகளும் இயக்கப்படுகிறது. மேலும் பெருகமணி–கரூர் வழித்தட மெயின்சாலையில் ஒவ்வொரு 5 முதல் 10 நிமிட இடைவெளியில் புறநகரப் பேருந்துகள் இயக்கப்படுகிறது. [பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்(கும்பகோணம்) லிட்., திருச்சி மண்டலம், அவர்களின் கடித எண்.159/2011 நாள்: 5–12–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	*மனு எண்*	*மனுதாரரின் பெயரும் முகவரியும்.*	*மனுவின் சுருக்கம்*
(1)	*(2)*	*(3)*	*(4)*
13	2823	திரு. சண்முக வேலன் மற்றும் கிராம பொதுமக்கள், அம்மாபட்டி அஞ்சல், ஈசநத்தம் (வழி) அரவக்குறிச்சி வட்டம், கரூர் மாவட்டம்–639 203.	அம்மாபட்டி, பெரியமஞ்சுவெளி ஆகிய ஊர்களிலிருந்து கரூர் செல்வதற்கு ஏதுவாக, கரூர் திண்டுக்கல் (வழி) பெரியமஞ்சுவெளி, அம்மாபட்டி வழியாக புதிய வழித்தடத்தில் பேருந்து வசதி செய்ய கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

கோரிக்கையிலுள்ள கரூர்–திண்டுக்கல் (வழி) ஈசநத்தம், அம்மாபட்டி, பெரியமஞ்சுவெளி வழியாக பேருந்து இயக்கக் கோரும் வழித்தடம் கரூரிலிருந்து திண்டுக்கல் செல்ல கிராமப்புற சுற்று வழித்தடமாகும். எனவே, இவ்வழித்தடத்தில் நேரடி பயணிகள் பயணம் செய்ய வாய்ப்பில்லை.

மேலும் அரவக்குறிச்சி–ஈசநத்தம் (வழி) கணவாய், பெரியமஞ்சுவெளி, அம்மாபட்டி வழியாக நகரப் பேருந்து ஒன்றின் மூலம் தினசரி 4 நடைகள் இயக்கப்படுகிறது. மேற்படி பெரியமஞ்சுவெளி மற்றும் அம்மாபட்டி கிராமமக்கள் இப்பேருந்தின் மூலம் கணவாய் மற்றும் ஈசநத்தம் சென்று அங்கிருந்து கரூர் செல்வதற்கு அதிக அளவில் பேருந்து வசதி உள்ளது.

[பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட்., திருச்சி மண்டலம், அவர்களின் கடித எண்.வ/திவ2/160/2011, நாள் 5–12–2011.]

குழுவின் குறிப்புரை.

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
14	2824	திரு. அ.கு.கா.சண்முகவேலன், த/பெ. காளியப்பன், 11/226, குடித்தெரு, அம்மாபட்டி அஞ்சல், ஈசநத்தம் வழி, அரவக்குறிச்சி தாலுக்கா, கரூர் மாவட்டம்–629 203.	ஈ.கருங்கல்பட்டி கிராமத்தில் மும்முனை தாழ் மின்னழுத்தம் காரணமாக புதிய துணை மின் நிலையம் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
நிலம் 1-06-2008-ல் கையகப்படுத்தப்பட்டது. பின் நிர்வாக அனுமதிக்கான கருத்துரு தலைமைப் பொறியாளர் திட்டமிடல்/சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. கருத்துரு விற்கான சந்தேகங்களுக்கு பதில் அனுப்பப்பட்டது. 01-11-2010 அன்று தமிழ்நாடு மின்சார வாரியம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகமான மின் தொடரமைப்பு கழகமாகவும் பிரிக்கப்பட்ட காரணத்தால், 110/33 கிவோ அறிமுகப்படுத்த தனி மதிப்பீடும் இனுங்கனூர், ஈ.கருங்கல்பட்டி 33/11 கிவோ துணை மின் நிலையங்களுக்கு தனி மதிப்பீடும் கோரப்பட்டது. அதன்படி தற்போது தனித்தனி மதிப்பீடுகளாக நிர்வாக அனுமதிக்காக 16-11-2011 அன்று தலைமைப் பொறியாளர்/பகிர்மானம்/ திருச்சி அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மீண்டும் தலைமைப் பொறியாளர்/ திட்டமிடல்/சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டு நிர்வாக அனுமதி பெற்றவுடன் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு துணை மின் நிலையம் அமைக்கப்படும். [மேற்பார்வை பொறியாளர், கமிபவ/கரூர் அவர்களின் கடித எண். உசெபொ./எம்.எம்./உ.பொ.கோ.தனி/அ.எண்.1186/2011, நாள்: 16-11-2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	*மனு எண்*	*மனுதாரரின் பெயரும், முகவரியும்.*	*மனுவின் சுருக்கம்*
(1)	*(2)*	*(3)*	*(4)*
15	2825	திரு. A.K.K. சண்முகவேலன் மற்றும் ஊர் பொதுமக்கள், அம்மாபட்டி கிராமம், அரவக்குறிச்சி வட்டம், கரூர் மாவட்டம்.	அம்மாபட்டி கிராமத்திற்கு காவேரி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் தடையின்றி குடிநீர் விநியோகம் செய்திட கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
அம்மாபட்டி கிராமம், கரூர் மாவட்டத்தில் க.பரமத்தி மற்றும் அரவக்குறிச்சி ஒன்றியங்களை சார்ந்த 378 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தில் கடைக்கோடியாக பயன்பெறும் கிராமம் (Tail end Habitation) ஆகும். இக்கிராமத்திற்கு கருங்கல்பட்டி நீரேற்று நிலையத்திலிருந்து நீர் ஏற்றப்பட்டுள்ளது. 2010–11 ஆண்டு புனரமைப்பு திட்டத்தின் கீழ் அம்மாபட்டி கிராமத்தில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு செல்லும் நீரேற்றுக் குழாய் மற்றும் மின்மோட்டார் மாற்றி அமைத்து 12–10–2011 முதல் காவிரி குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. நீரேற்று நிலையங்களில் ஏற்படும் மின்தடை மற்றும் தொடர் மின்சாரம் இல்லாத காரணத்தால் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை காவிரி குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. [நிர்வாகப் பொறியாளர், த.கு.வ.வாரியம், கி.கு.திட்ட கோட்டம், கரூர் அவர்களின் கடித எண். 11968/2011–1/சமபேச(மனு3) நாள்: 17–11–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	*மனு எண்*	*மனுதாரரின் பெயரும் முகவரியும்.*	*மனுவின் சுருக்கம்*
(1)	*(2)*	*(3)*	*(4)*
16	2827	திரு. பழ.இராமன், த/பெ.பழனியப்பன், 48/179, மேல அக்ரஹாரம், கிருஷ்ணராயபுரம் அஞ்சல், கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம்.	கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், மாயனூரில் காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுவரும் புதிய கதவணை மற்றும் இருவழிபாலம் அருகே நிரந்தர பூங்கா சுற்றுலா மையம் அமைக்கக் கோருதல்.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்	துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
17	2829	திரு. ராசி.மாமுண்டியாபிள்ளை, தலைவர், குளிர் தண்டலை நகர வளர்ச்சி சங்கம், 13, சங்ககேட் தெரு, குளித்தலை–639 104, கரூர் மாவட்டம்.	1) அ/மி.கடம்பவனேஸ்வரர் திருக்கோவிலில் சுற்றுலா பூங்கா அமைக்கக் கோருதல். 2) குளித்தலையில் அமைந்துள்ள அ/மி இரத்தினகிரீஸ்வரர் திருக்கோவிலுக்கு சொந்தமான தெப்பக்குளத்தினை சுற்றி பூங்கா அமைக்கக் கோருதல்.	மாயனூர் பிரிவுக்கு உட்பட்ட காவிரி ஆற்றின் குறுக்கே கட்டுப்பட்டு வரும் புதிய கதவணை பணியில் புதிய கதவணை அருகில் பூங்கா அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, புதிய கதவணை பணியின் போது நிரந்தர பூங்கா அமைக்கப்படும் மற்றும் புதிய கதவணை இடையே தென்கரை வாய்க்கால் அருகாமையில் செல்லாண்டி அம்மன் கோவில் அருகே நிரந்தர சுற்றுலா மையம் அமைக்க இத்துறை மூலம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர், கரூர் அவர்கள் நே.மு.க.எண்.164/சு.அ.தி/2011, நாள் 20–09–2011ன்படி இயக்குநர் சுற்றுலாத் துறை ஆணையத்திற்கு அனுப்பப்பட்டு பரிசீலனையில் உள்ளது. ஆணை கிடைக்கப்பெற்றவுடன் பணி முடிக்கப்படும். [உதவி செயற்பொறியாளர், பொ.ப.து.நீ.ஆ.து. ஆ.பா.உபகோட்டம், குளித்தலை அவர்களின் கடித எண்.321/கோ.112கே/2011 நாள்: 19–09–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

துறையின் பதிலுரை.

(5)

1) குளித்தலை அ/மி.கடம்பவனேஸ்வரர் திருக்கோவிலில் பூங்கா அமைப்பதற்கான திட்ட மதிப்பீடு வேண்டி செயல் அலுவலர் அவர்களிடம் கேட்டுக் கொண்டதில், பூங்கா அமைப்பதற்கான நிலம் ஆற்றின் உட்பகுதியில் அமைந்துள்ளது எனவும், தாழ்வான பகுதியாக இருப்பதால் மழைக்காலங்களில் காவிரியில் பெருக்கு ஏற்படும் காலங்களில் சுற்றுலாப் பயணிகளுக்கும், பொதுமக்களுக்கும் தேவையான பாதுகாப்பு இருக்காது எனவும், வெள்ள பெருக்கின்போது பூங்காவில் அமைக்கப்படும் அரங்குகள், விளையாட்டு சாதனங்கள், பூங்காக்கள் ஆகியவை அடித்துச் சென்று பெரிய அளவில் இழப்புகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக தெரிவித்துள்ளார். எனவே, மேற்படி இடத்தில் சுற்றுலா பூங்கா அமைக்க உகந்த இடமாகாது.

2) அய்யர்மலையிலுள்ள அ/மி.இரத்தினகிரீஸ்வரர் கோவிலில் சுற்றுலாத் துறையின் மூலம் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் பக்தர்கள் தங்கும் ஓய்வு கூடம், யோகா மற்றும் தியான மண்டபம், வரவேற்பு அறை, புல்தரை அமைத்தல், மதில் சுவர் அமைத்தல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றது.

குளித்தலையில் அமைந்துள்ள அய்யர்மலை அ/மி.இரத்தினகிரீஸ்வரர் கோவிலுக்கு சொந்தமான தெப்பக்குளத்தைச் சுற்றி பூங்கா அமைக்க செயல் அலுவலர் அவர்களிடம் திட்டமதிப்பீடு கோரப்பட்டதில், மேற்படி திருக்குளம் முட்புதர்களால் சூழப்பட்டு, தூர்ந்த நிலையில் உள்ளதாகவும், இக்குளத்திற்கான தண்ணீர்வரத்துப் பாதைகள் அடைக்கப்பட்டு, தண்ணீர் நிரப்பும் சூழ்நிலை இல்லாமல் இருந்து வருகிறதெனவும், இங்கு பங்குனி மாதத்தில் ஒரு நாள் நடைபெற்று வந்த தெப்பத் திருவிழா கடந்த 20 ஆண்டுகளாக நடைபெறவில்லை என தெரிவித்துள்ளார். எனவே, இங்கு பூங்கா அமைப்பதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை.

[சுற்றுலா அலுவலர், சுற்றுலா அலுவலகம், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடித எண்.292/சுஅதி/2011, நாள்: 23–12–2011.]

குழுவின் குறிப்புரை.

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
18	2830	திரு. பெ.ராமநாதபிள்ளை, 17ஏ, டவுன்ஹால் தெரு, குளித்தலை–639 104.	குளித்தலை காவிரி நதிக்கரையில் கரை ஓரத்திலும் காவிரி நதிக்குள்ளும் நெம்வேலி, காட்டாமணக்கு மற்றும் சம்பை அகற்றக் கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

குளித்தலை காவிரியில் மணல் திட்டுகள் உள்ளதால் காட்டாமணக்கு, சம்பு போன்ற செடிகள் வளர்ந்து வருகின்றன. எனவே, மணல் திட்டுகளை மணல் குவாரிமூலம் அகற்றிட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு கருத்துருக்கள் சமர்ப்பிக்கப்பட்டு, திருக்காம்புலியூர், இராஜேந்திரம், நெரூர் தென்பாகம் ஆகிய குவாரிகள் மாவட்ட ஆட்சியர், கரூர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.ந.க.209/G&M/2011 நாள் 16–08–2011–ன் மூலம் அனுமதி வழங்கப்பட்டு மணல் திட்டுகள், காட்டாமணக்கு மற்றும் சம்பு செடிகள் அகற்றப்பட்டு வருகிறது. மேலும், குளித்தலை பகுதிகள் உள்ள அனைத்து காட்டாமணக்கு மற்றும் சம்பு போன்ற செடிகள் மணல் குவாரிகள் மூலம் அகற்றி சீரான நீரோட்டம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

[உதவி செயற்பொறியாளர், பொ.ப.து.நீ.ஆ.து, ஆ.பா.உ.கோட்டம், குளித்தலை அவர்களின் கடித எண்.கோ.19/2011 நாள்: 14–09–2011.]

குழுவின் குறிப்புரை.

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
19	2833	திரு. கோபாலதேசிகன், P.M. துரைசாமி அறக்கட்டளை வளாகம், மருதூர், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம்.	குளித்தலை–சத்திரம் பேருந்து நிலையத்திற்கு அரைமணி நேரத்திற்கு ஒரு நகரப் பேருந்து இயக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
திருச்சி சத்திரம்பேருந்து நிலையம்–குளித்தலை வழித்தடம் திருச்சி–கரூர் பேருந்துகள் இயங்கும் பிரதான வழித்தடமாகும். தற்பொழுது 6 நகரப் பேருந்துகள் மூலம் திருச்சி ச.பே.நிலையம்–மணத்தட்டை (வழி) குளித்தலை வழித்தடத்தில் தினசரி 4 நடைகளும், திருச்சி ச.பே. நிலையம்–குளித்தலை வழித்தடத்தில் தினசரி 10 நடைகளும் இயக்கப்படுகிறது. மேலும் இவ்வழித்தடத்தில் திருச்சியிலிருந்து குளித்தலை, கரூர், ஈரோடு, திருப்பூர், கோவை வழித்தட புறநகரப் பேருந்துகள் மூலம் ஒவ்வொரு ஐந்து முதல் 10 நிமிட இடைவெளியில் போதுமான பேருந்துகள் இயக்கப்படுகிறது. [பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட்., திருச்சி மண்டலம், அவர்களின் கடித எண். திவ2/161/2011, நாள்: 5–12–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
20	2834	திரு. க. தங்கராஜ், தமிழக நுகர்வோர் இயக்கம், மேட்டுத்திருக்காம்புலியூர், கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம்.	பழுதான மதகுகளை பராமரித்தல், கால்வாய்கள் தூர்வாருதல், கால்வாய்களில் ஆக்கிரமிப்புகள் அகற்றுதல், கட்டலை மேட்டு வாய்க்கால்களில் உள்ள பழுதடைந்த பாலங்களை சீர் செய்தல் கிளை வாய்க்கால்களுக்கு தூர்வாரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
பழுதான மதகுகள் பராமரிப்பு கால்வாய்கள் தூர்வாருதல், கிளைவாய்க்கால்கள் தூர்வாருதல், ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் போன்ற வேலைகள் யாவும் நபார்டு வங்கி உதவியுடன் முழுமையாக சீர்செய்வதற்கு செயற்பொறியாளர், ஆற்றுப்பாதுகாப்பு கோட்டம், திருச்சி அவர்கள் மூலம் ரூ. 150.00 கோடிக்கு கருத்துரு சமர்ப்பித்து, பணி மேற்கொள்வதற்காக மாவட்ட ஆட்சியர், கரூர் அவர்கள் மூலமாக அரசின் ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆணை கிடைக்கப்பெற்றவுடன், பணி முடிக்கப்படும். [உதவி செயற்பொறியாளர், பொ.ப.து. நீ.ஆ.து. ஆ.பா. உபகோட்டம், குளித்தலை அவர்களின் கடித எண். கோ. 19/2011 நாள்: 14-09-2011]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
21	2837	திரு. K. ராமதாஸ், திம்மாச்சிபுரம் அஞ்சல், குளித்தலை வட்டம்-தொகுதி, கரூர் மாவட்டம்-639 105.	திருச்சி-கரூர் வழித்தடத்திலுள்ள திம்மாச்சிபுரம் பேருந்து நிறுத்தத்தில் விரைவு பேருந்துகள் உட்பட அனைத்து பேருந்துகளையும் நின்று செல்லக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

திருச்சி – கரூர் வழித்தடத்தில் இயக்கப்படும் குறுநடை பேருந்துகள் (தொலைதூர பேருந்துகள் தவிர) அனைத்தையும் திம்மாச்சிபுரம் பேருந்து நிறுத்தத்தில் நிறுத்தி பயணிகளை ஏற்றி, இறக்கி செல்ல சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தப்பட்டு, பேருந்துகள் நின்று செல்வதை அவ்வப்பொழுது பரிசோதகர்கள் மூலம் கண்காணிக்கப்பட்டும் வருகிறது.

[தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (கும்பகோணம்) லிட், திருச்சி மண்டலம் அவர்களின் கடித எண் வ/திவ2/163/2011 நாள்:5–12–2011]

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
22	2838	திரு. பொன். குணசேகரன், மேட்டுத்திருகாம்புலியூர், கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம்.	1. கரூர்–திருச்சி வழித்தடத்தில் இயக்கப்படும் அரசு மற்றும் தனியார் பேருந்துகளை திருக்காம்புலியூரில் நின்று செல்ல கோருதல். 2. கரூர்–மகாதானபுரம், முசிறி–மாயனூர் வழித்தட நகரப் பேருந்துகளை மேட்டுத்திருகாம்புலியூர்–காட்டுர்–மாயனூர் வழியாக தடமாற்றம் செய்து இயக்க கோருதல். 3. கரூர்–பாப்பையம்பாடி வழித்தட நகரப் பேருந்தினை கூடுதலாக காலை, மாலை, இரவு வரை தொடர்ந்து இயக்க கோருதல். 4. கரூர்–தரகம்பட்டி–மணப்பாறை செல்லும் தனியார் பேருந்து (MMM) காட்டுர், திருக்காம்புலியூர் வழியாக சென்று வரக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

1. திருச்சி–கரூர் வழித்தடத்தில் இயக்கப்படும் குறுநடைப் பேருந்துகள் அனைத்தையும் திருக்காம்புலியூர் பேருந்து நிறுத்தத்தில் நின்று செல்ல கற்றறிக்கை மூலம் அறிவுறுத்தப்பட்டு பேருந்துகள் நின்று செல்வதை அவ்வப்பொழுது பரிசோதகர்கள் மூலம் கண்காணிக்கப்பட்டும் வருகிறது.

2. கரூர்–மகாதானபுரம், முசிறி–மாயனூர் வழித்தட நகரப் பேருந்துகளை மேட்டுத்திருக்காம்புலியூர், எழுதியாம்பட்டி, காட்டுர் வழியாக தடமாற்றம் செய்தால் இவ்வழித்தட நீளம் 4.3 கி.மீ. கூடுதலாகி நேரடி பயணிகளுக்கு பயணநேரம், பயணக் கட்டணம் ஆகியவை கூடுதலாகி பாதிப்பு ஏற்படும். எனவே, தடமாற்றம் செய்து இயக்க இயலாத நிலை உள்ளது.

3. பல்வழித்தட திட்டத்தின் கீழ் நகரப் பேருந்து ஒன்றின் மூலம் கரூர் – பாப்பையம்பாடி (வழி) மாயனூர், மேட்டுத் திருகாம்புலியூர் வழியாக தினசரி 4 நடைகளும் கரூர்–மேட்டுத் திருகாம்புலியூர் (வழி) மாயனூர் வழியாக தினசரி 2 நடைகளும் இயக்கப்படுகிறது. மேலும் இப்பேருந்து மேலமாயனூர், பஞ்சப்பட்டி ஆகிய ஊர்களுக்கு இயக்கப்படுவதால், இப்பேருந்தின் அனைத்து நடைகளையும் இவ்வழித்தடத்தில் மாற்றம் செய்து இயக்க இயலாத நிலை உள்ளது.

4. தனியார் பேருந்து எண். MMM–ஐ தடமாற்றம் செய்து இயக்க நடவடிக்கை எடுக்க ஏதுவாக இம்மனு வட்டாரப் போக்குவரத்து அலுவலர் கரூர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

[பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட், திருச்சி மண்டலம், கடித எண். தஅ/வ/திவ2/164/2011, நாள்: 5–12–2011.]

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
23	2840	திருமதி கு. செல்வி, கிராமக் கல்விக் குழுத் தலைவர் மற்றும் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, வேலங்காட்டுப்பட்டி, கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர்.	வேலங்காட்டுப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, கூடுதல் ஆசிரியர் பணியிடம் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
இப்பள்ளியில் 1 பட்டதாரி தலைமை ஆசிரியர் 3 பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் ஒரு இடைநிலை ஆசிரியர் பணியாற்றி வருகின்றனர். 2011–2012 ஆண்டுக்கான ஆசிரியர் கூடுதல் நிர்ணய அறிக்கை கோரப்பட்டபோது, வேலங்காட்டுப்பட்டி நடுநிலைப் பள்ளிக்கு கூடுதல் இடைநிலை ஆசிரியர் பணியிடம் அனுமதிக்க கோரும் கருத்துருக்கள் மின்னஞ்சல் மூலம் தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநருக்கு 8–11–2011 அன்று அனுப்பப்பட்டுள்ளது. [மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர், கரூர் அவர்களின் கடித எண் 4134/அ2/2011 நாள் 1–12–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-III

குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–III

குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்கள் விவரங்கள்

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
1	2781	திரு. ஏ. பீட்டர் செல்வராஜ், 30, விசுவாசபுரம் மற்றும் ஏ.வி.பி. நகர் பொதுமக்கள் சார்பு, சணப்பிரட்டி ஊராட்சி 1வது வார்டு, பசுபதிபாளையம் வடக்கு, கரூர்.	குடிநீர் வசதி செய்து தரக்கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
கரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 33, விசுவாசபுரம் மற்றும் ஏ.வி.பி. நகர் முதல் தெரு ஆகிய பகுதிகளில் உள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்க ஏதுவாக புதிதாக 4" துணை பகிர்மான குழாய் அமைப்பதற்கு மதிப்பீடு ரூ. 5.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு நகர்மன்றத்தின் முன் அனுமதி பெற்று 20–12–2011ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு 21–12–2011ம் தேதி வேலை உத்திரவு வழங்கப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது. பணி முடிவுற்றபின், அப்பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்படும். [ஆணையர் கரூர் நகராட்சி அவர்களின் கடித எண். இ1/3087/2011, நாள்: இல்லை.]	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
2	2797	திரு. சி. சண்முகம், மாரியம்மன்கோவில் தெரு, கிருஷ்ணராயபுரம் அஞ்சல் & வட்டம், கரூர் மாவட்டம்.	கிருஷ்ணராயபுரத்தில் இயங்கி வந்த கால்நடை மருத்துவ மனைக்கு புதிய கட்டிடம் கட்ட ஆக்கிரமிப்பு அகற்ற கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
கால்நடை மருத்துவக் கட்டிடம் கட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட கிருஷ்ணராயபுரம் வடக்கு கிராம் புல எண் 158/2 பவுண்ட் புறம்போக்கில் உள்ள ஆக்கிரமிப்பு முழுவதும் 04–10–2011 அன்று அகற்றப்பட்டு விட்டது. (கிருஷ்ணராயபுரம் வட்டாட்சியரின் ந.க.ஆ 1/3305/2009 நாள்: 04–10–2011.) [வட்டாட்சியர், கிருஷ்ணராயபுரம் அவர்களின் கடித எண். ஆ1/3505/2011 நாள்: 05–12–2011.]	ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு கட்டடப் பணிகள் நடைபெற்று வருவதால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
3	2819	திரு. கு. கண்ணதாசன், எம்.ஏ., தலைவர், பெற்றோர் ஆசிரியர் கழகம், ஆதிதிராவிடர் நல நடுநிலைப்பள்ளி, நெய்தலூர், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம்.	கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், நெய்தலூர் ஆதிதிராவிடர் நல நடுநிலைப்பள்ளியை 2011–2012ஆம் கல்வியாண்டிலேயே உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.) துறை அரசாணை (நிலை) எண். 100 நாள் 31–10–2011ன்படி கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், நெய்தலூரில் உள்ள அரசு ஆதிதிராவிடர் நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. அதன்பேரில் 9ஆம் வகுப்பில் மாணவர்கள் சேர்க்கப்பட்டு பள்ளி நடைபெற்றுவருகிறது.

[முதன்மை கல்வி அலுவலர் கரூர் அவர்களின் கடித எண் 4165/அ3/2011 நாள் 23–12–2011]

குழுவின் குறிப்புரை

(6)

நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
4	2836	திரு.தி.க. பெருமாள்ராஜி, அக்ரஹாரம், திம்மாச்சிபுரம் அஞ்சல், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம்–639 105.	திருச்சி–கரூர் வழித்தடத்திலுள்ள திம்மாச்சிபுரம் பேருந்து நிறுத்தத்தில் express பேருந்துகள் உட்பட அனைத்து பேருந்துகளையும் நின்று செல்லக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

திருச்சி–கரூர் வழித்தடத்தில் இயக்கப்படும் குறுநடை பேருந்துகள் (தொலைதூர பேருந்துகள் தவிர) அனைத்தையும் திம்மாச்சிபுரம் பேருந்து நிறுத்தத்தில் நிறுத்தி பயணிகளை ஏற்றி, இறக்கி செல்ல சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தப்பட்டு, பேருந்துகள் நின்று செல்வதை அவ்வப்பொழுது பரிசோதகர்கள் மூலம் கண்காணிக்கப்பட்டும் வருகிறது.

[பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட், திருச்சி மண்டலம் அவர்களின் கடித எண் வ/திவ2/162/2011 நாள்: 5–12–2011.]

குழுவின் குறிப்புரை

(6)

நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
5	2841	திரு. மு. கிருஷ்ணமூர்த்தி, விடியல் (ஆடவர்) சேவைக்குழுத் தலைவர், எண். 78, உழவன் பணிமனை, நங்கவரம், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம்.	நங்கவரம் கிராமத்தில் மூடப்பட்டு இருக்கும் மருத்துவமனையை (ஊரக மருந்தகம்) செயல்படுத்தக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டத்திற்கு உட்பட்டது நங்கவரம் ஊரக மருந்தகம். இம்மருந்தகம் முழுவதுமாக ஆணையர், ஊராட்சி ஒன்றியம் குளித்தலை அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது.

இம்மருந்தகத்தின் செயல்பாட்டுக்கு போதிய நிதி இல்லாத காரணத்தினால் சரிவர செயல்படாமல் இருந்துள்ளது. இந்நிலையில் இம்மருந்தகத்தில் பணிபுரிந்து வந்த மருத்துவ அலுவலர் ஓய்வு பெற்ற நிலையிலும், பெண் செவிலியர் விருப்ப ஓய்விலும் சென்ற நிலையில் இருந்ததால் தற்போது மருந்தகம் செயல்படாமல் உள்ளது.

குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் படியும், ஊர் பொதுமக்கள் சார்பாக பெறப்பட்ட மனுவின்படியும், இத்துறை சார்பில் (பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை) ஆரம்ப சுகாதார நிலைய பயன்பாட்டிற்காக நங்கவரம் ஊரக மருந்தக கட்டிட சாவியினை வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி ஒன்றியம் குளித்தலை அவர்களிடம் 23–12–2011 அன்று பெறப்பட்டது.

இப்பகுதி நச்சலூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உட்பட்டது. நங்கவரத்தில் ஏற்கனவே துணை சுகாதார நிலையம் வாடகை கட்டிடத்தில் இயங்கிவருகிறது.

அதனை புதிதாக பெறப்பட்ட ஊரக மருந்தக கட்டிடத்திற்கு மாற்றம் செய்து தேவையான மருந்து மாத்திரைகளை இருப்பில் வைத்து, கிராம சுகாதார செவிலியர் அங்கேயே தங்கி இருந்து, பொது மக்களுக்கு மருத்துவ சேவை அளிக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தற்போது மூடப்பட்டு

குழுவின் குறிப்புரை

(6)

நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

துறையின் பதிலுரை—தொடர்ச்சி

(5)

சேவை அளிக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தற்போது மூடப்பட்டு கிடந்த மருத்துவமனை பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் மூலம் நங்கவரம் மக்கள் தலைவலி காய்ச்சல், வயிற்றுப்போக்கு போன்ற உபாதைகளுக்கு இந்த மருத்துவமனையிலேயே சிகிச்சை பெறத்தக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் வாரம்தோறும் திங்கள் மதியம் நச்சலூர் மருத்துவ அலுவலர் இங்கு நேரில் சென்ற நங்கவரம் மக்களுக்கு சிகிச்சை செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

[துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், கரூர் அவர்களின் 5619/அ3/2011, நாள்: 01–12–2011.]

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
6	2842	திரு. E. ஜான்சன் ஜெபராஜ், தலைமையாசிரியர், வ.ஊ.சி. அரசு நிதியுதவி பெறும் இடைநிலைப்பள்ளி, கரூர்.	பள்ளிக்கு அருகில் உள்ள காவல் உதவி மையத்தில் அமர்ந்து மது அருந்தியும், ஆடுகளை கட்டி வைத்தும் சுகாதாரக் கேடு விளைவிப்பதாலும், போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதாலும் அந்த காவல் உதவி மையத்தை அகற்றக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
பள்ளிக்கு அருகில் இருந்த காவல் உதவி மையம் நகராட்சி உதவியுடன் வ.ஊ.சி. தெரு பொது மக்களால் அகற்றப்பட்டுவிட்டது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

[காவல் கண்காணிப்பாளர், கரூர் அவர்களின் கடித எண் ஜி6/28776/2011 நாள்: 8–12–2011.]

அ.மு.பி. ஜமாலுதீன்,
செயலாளர்.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS